

# National Framework for Social Dialogue

# සමාජ කතිකාව උදෙසා වන ජාතික සැලැස්ම

# சமூக கலந்துரையாடலுக்காக தேசிய கட்டமைப்பு

# National Framework for Social Dialogue



Whereas Sri Lanka is a nation committed to achieve good governance, democracy and social justice as a responsible, member of the International Labour Organization (ILO) having ratified the core conventions of the ILO and respecting its founding principles, and the UN's Covenant on Civil & Political Rights.

And whereas the country is committed to carry forward the tradition and legacy of social dialogue, which spans many centuries in time.

And whereas through its Constitution and by means of other legislation the government of the Democratic Socialist Republic of Sri Lanka has underwritten the rights flowing from fundamental civil liberties and non discrimination.

And whereas the Government of Sri Lanka recognizes that industrial harmony and national productivity are imperatives upon which the development of the nation is dependent and that economic and social advancement could be achieved by greater understanding and self regulation by the social partners.

And whereas the tripartite constituents accept that social dialogue and tripartism are indispensable democratic means to address economic development and social concerns, by building consensus and achieving greater understanding of the needs and concerns of the respective parties.

And recalling the numerous challenges and opportunities facing the world of work in the in the context of globalization and the importance of the social constituents achieving appropriate solutions at national, regional, sector and enterprise levels.

And whereas the **Decent Work Country Programme** formulated for the period 2008 -2012 recognizes the significant contribution the tripartite constituents should play in developing road maps for the implementation of the identified priorities which are:

- ✓ Enhanced access to more and better jobs in economically disadvantaged and crisis affected areas.
- ✓ Enhanced labour administration and promotion of equitable employment practices.
- ✓ Improved tripartite cooperation on initiatives linking job security, productivity and competitiveness.

The programme also identified cross cutting themes which were: The informal economy, gender equality, promotion and ratification ILO Standards, and adaptation of the code of practice on HIV/AIDS.

The parties having resolved to formulate a framework for social dialogue for the tripartite constituents which will give more impetus to and focus in achieving the goals of the Decent Work Country Programme have agreed as follows:

That Employers, Workers and their Organizations commit to the following responsibilities which would be vital in making Sri Lanka more productive as a whole, make enterprises more efficient, make it possible for workers to enjoy a better quality of life and enhance the creation, and security, of decent employment:

1. Ensure the observance and application of employment related laws, and the promotion of freedom of association and the right to collective bargaining, as means of achieving social justice and equality.
2. Assist in the review of employment related laws which comply with international standards and enter into a continuous dialogue to monitor compliance.
3. Respect the rights of employers and workers to organize themselves in accordance with the Trade Unions Ordinance and the Industrial Disputes Act to conduct their collective activities without hindrance and interference.
4. Desist from any form of discrimination against any employer and worker organization and their leaders or their members and to recognize their fundamental right to associate and carry on their activities freely and without restraint, other than those imposed by national law.
5. Introduce efficient and impartial dispute and grievance procedures and to ensure that employment related issues are resolved peacefully, and in a manner which gives the nation a reputation for embracing best practice in industrial relations.
6. Avoid unfair practices which result in loss and damage to the community, loss or hardship to affected individuals and to co-operate in resolving issues through dialogue and mediation where the latter is appropriate.
7. Support, design and introduce machinery for consultation and dialogue at the national, regional, sector and enterprise levels and to ensure that such machinery is effective; and to engage in research individually and collectively to support meaningful dialogue and problem solving.
8. Reach out to unorganised sectors of the economy in order to support the development of responsible business which values tripartism and social dialogue.
9. Recognizing that an environment conducive to investment, efficient production and trade is essential for the creation of jobs, to engage in identifying positive contributions which could be made by the tripartite constituents towards this end.
10. Organize regular activities for the exchange of information between the employers and workers organizations so that issues of national importance could be discussed and the parties could participate meaningfully in national development and socio-economic development issues.
11. Promote the creation of bipartite mechanisms at enterprise level and to assist in creating capacity necessary to promote active and meaningful participation in such bodies created.

## Lead Role of the Government

1. Ensure that the necessary preconditions exist for social dialogue, including:

   a. Respect for the Fundamental Principles and Rights at Work in terms of the ILO Declaration and ensure that all national laws are in compliance with ratified conventions and further to ensure speedy and effective implementation in law and practice.

   b. Due implementation of the Rights guaranteed to all citizens especially the Freedom of Association, Freedom of Expression and the Freedom to engage in any lawful Occupation, Profession, Trade, Business or Enterprise as conferred under the constitution of the Democratic Socialist Republic of Sri Lanka and Conventions of the ILO.

   c. Establish a conducive climate for industrial relations, respect and recognition for the role of the employers & workers organizations and for collective bargaining,

2. Promote and enhance bipartism and tripartism, especially in sectors where they are absent or scarce, with the objective of:

   a. Improving relations between employers and workers having a clear strategy to address issues at national, regional and sector levels in meaningful ways.

   b. Giving the employers and workers and their organizations a voice in national development and planning.

   c. Resolving disputes between the parties impartially, with speed and in a manner which recognizes their rights to a fair hearing.

   d. Improving conditions at work and dealing with Safety & Health at Work.

   e. Enhancing Social Protection.

   f. Training and education.

   g. Promoting a legal framework in full compliance with ILO fundamental principles and rights at work.

   h. Ensuring the effective implementation of laws and regulations, review of laws and regulations to changing work and social requirements in keeping with international standards, and introduction or modification of laws and regulations to give effect to ratified ILO Conventions.

   i. Improving productivity and competitiveness of the Sri Lankan industry and services.

   j. Building capacity of parties for carrying on their activities as employers and workers representatives effectively.

   k. Any other matter which has a direct impact on employment, and engaging employers and workers organizations in resolving such issues.

3. Ensure effective implementation of Collective Agreements, Legal Settlements, Awards and Orders and to ensure that Officers whose function, is to provide the relevant services, maintain the high standards expected of them of impartiality, and are motivated and properly trained to engage in their work.

4. Formulate Grievance and Dispute Procedures which could be used as best practice by employers and workers organizations and where disputes take place to encourage the parties themselves to find solutions which are fair and sustainable.

**5.** Provide suitable training and education to workers and employers organizations to engage in a healthy and meaningful dialogue and to ensure that information services are available to support proper Collective Bargaining and participation in Dialogue and Consultation.

**6.** To fully implement Convention 144 and other ratified standards and to involve workers and employers organizations in evaluating the effectiveness of their implementation.

## Tripartite Responsibility & Common Role of all Tripartite Constituents

Specifically the parties agree, with the leadership given by the government, to launch a National Consultative Forum which in conjunction with existing mechanisms, and new mechanisms that are needed, to achieve the following objectives:

**i.** Non discrimination and equal opportunity for all.

**ii.** National re-integration and building social capital.

**iii.** Participation of Employers & Workers Organizations in national planning and development initiatives.

**iv.** Promotion of ethical investment and creation of gainful and quality employment.

**v.** Productivity & Gain sharing.

**vi.** Greater awareness of the benefits of practising human rights and values in developing the economy for the benefit of the whole community.

**vii.** The utilization of Alternative Dispute Resolution (ADR) processes especially Mediation and Dialogue Groups.

**viii.** Due implementation of national and international standards.

**ix.** Issues of migrant workers.

**x.** Capacity building of workers & employers organizations.

**xi.** Research, education and skills training for competence in playing a meaningful role at national level or in spreading the message of the value of dialogue at the enterprise level.

The parties who have subscribed to this framework signifying their commitment have set their hands hereunto at Colombo, on the Twenty Fourth day of April 2009.

# සමාජ කතිකාව උදෙසා වන ජාතික සැලැස්ම



ජාත්‍යන්තර කම්කරු සංවිධානයේ වගකීම් සහගත සාමාජික රටක් වන බැවින් ශ්‍රී ලංකාව යහ පාලනය හා ප්‍රජාතන්ත්‍රවාදය හා සමාජ සාධාරණත්වය උදෙසා කැපවෙමින් එම සංවිධානයේ මූලික ප්‍රතිපත්ති වලට ගරු කරමින් එක්සත් ජාතීන්ගේ සිවිල් හා දේශපාලනික අයිතිවාසිකම් පිලිබද මූලික සම්මුතීන් බලාත්මක කිරීමට දායක වී සිටින හෙයින්ද

එමෙන්ම ශතක ගනනාවක් තිස්සේ එම සමාජ සංවාදය සදහා වන සම්ප්‍රදායන් හා ප්‍රවාද ඉදිරියට ගෙනයාමට කැපවී සිටින හෙයින්ද

එමෙන්ම ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආන්ඩු ක්‍රම ව්‍යවස්ථාව හා සෙසු ව්‍යවස්ථාදායක ආයතන යටතේ මූලික සිවිල් නිදහසේ හා වෙනස් ලෙස සැලකීමට ලක් නොවීමේ අයිතිවාසිකම් ලිඛිතව සදහන් කොට ඇති හෙයින්ද

එමෙන්ම ශ්‍රී ලංකා රජය කාර්මික සාමය හා ජාතික ඵලදායිතාව මෙරට ආර්ථික සමාජ අභිවෘද්ධිය අත්‍යවශ්‍ය සාධක ලෙස සලකන බැවින්ද

එමෙන්ම ආර්ථික සංවර්ධනය හා සමාජ අවභ්‍යතා සාක්ෂාත් කරගැනීමට අත්‍යවශ්‍ය ප්‍රජාතන්ත්‍රවාදී මාර්ග ලෙස ත්‍රෛපාර්ශවික තත්වය හා සමාජ සංවාදය ත්‍රෛපාර්ශවික ආයතන විසින් සලකන බැවින්ද ගෝලියකරණ තත්වයන් යටතේ ලොව පුරා වැඩකරන ජනතාව මුහුණ දෙන විවිධ අභියෝග හා අවස්ථාවන්ට සුදුසු විසදුම් සෙවීමේ අවශ්‍යතාව මෙනෙහි කරමින් සුනිසි මෙහෙවර වැඩසටහන සැලසුම් කොට තිබේ. 2008 වසරේ සිට 2012 වසර දක්වා බලපැවැත්වෙන මෙම වැඩසටහනේදි පහත දැක්වෙන හදුනාගත් ක්ෂේත්‍ර වල ප්‍රමුඛතාව ත්‍රෛපාර්ශවිය ආයතන වල අපේක්ෂාවයි.

එම ප්‍රමුඛතා ලෙස සැලකෙන්නේ

- ආර්ථික වරප්‍රසාද අඩු හා ජනවාර්ගික අර්බුදයෙන් පීඩා විදින ප්‍රදේශ වල වැඩි රැකියා අවස්ථා හා ගුණාත්මක බවින් යුත් රැකියා අවස්ථා උදා කිරීම.
- සේවා ස්ථානයේ තත්වයන් හා අයිතිවාසිකම් වැඩිදියුනු කිරීම.
- ත්‍රෛපාර්ශවීය සහයෝගීතාව වැඩි දියුණු කොට රැකියා සුරක්ෂිත භාවය ඵලදායිතාව හා තරගකාරීත්වය නැංවීම.

මීට අමතරව අවිදිමත් ආර්ථිකය, ස්ත්‍රී පුරුෂ සමානතාව, ජාත්‍යන්තර කම්කරු නීති ක්‍රියාත්මක කිරීම හා එච් අයි වී / ඒඩ්ස් පිලිබද විධිවිධාන සම්බන්ධයෙන් දැනුවත් කිරීමද වැඩසටහනේ අරමුනු අතර වේ.

සුනිසි මෙහෙවර වැඩසටහනින් අදාළ සමාජ කතිකාව සදහා පහත දැක්වෙන එකගතාවන්ට එම පාර්ශව එළඹ සිටී.

1. රැකියා ආශ්‍රිත නීති පිලපැදීම හා ක්‍රියාත්මක කිරීම, සමාගම් පැවැත්වීමේ නිදහස තහවුරු කිරීම, සමාජ සාධාරණත්වය හා සමානව සැලකුම් ලැබීමේ මාර්ගයක් ලෙස සාමුහික කේවල් කිරීමට ඇති අයිතිය.

2. අන්තර් ජාතික ප්‍රමිතීන්ට අනුකුල රැකියා ආශ්‍රිත නීති විචාරීම සදහා සහාය වීම සහ නිරීක්ෂණය පිලිබද අඛණ්ඩ කතිකාවකට එළඹීම.

3. වෘත්තීය සමිති විධිවිධාන හා කාර්මික ආරවුල් පනත ප්‍රකාර සේව්‍යන්ට සේවකයන්ට සාමුහිකව ක්‍රියාත්මක වීමට සංවිධාන වීමට ඇති අයිතිය බාධාවකින් තොරව භාවිත කිරීමට ඉඩ සැලසීම.

4. රටේ ජාතික නීතියට යටත් වන අවස්ථාවකදී හැර සෙසු අවස්ථා වලදී සේව්‍ය හා සේවක සංවිධාන හා ඒවායේ නායකයින්ට හෝ සාමාජිකයින්ට කිසිදු ආකාරයක වෙනස්කමක් දැක්වීමෙන් වැලකීම හා ඔවුන්ට සිය කටයුතු බාධාවකින් තොරව පවත්වා ගෙන යාමට ඇති මුලික අයිතිය පිලිගැනීම හා තහවුරු කිරීම.

5. දුක්ගැනවිලි හා ආරවුල් පිලිබදව කාර්යක්ෂම හා අපක්ෂපාතී ක්‍රමවේදයක් හදුන්වා දීම, රැකියා ආශ්‍රිත ගැටලු සාමකාමීව විසදීම මගින් රටට කීර්තියක් ගෙන දෙන ආකාරයෙන් කාර්මික සබදතා පවත්වා ගෙන යාම.

6. ප්‍රජාවට හානි හෝ පාඩු සිදුවන හෝ පුද්ගලයින්ට හානි හෝ අපහසුතා සිදුවන ආකාරයේ අසාධාරණ ක්‍රියා වලින් වැලකීම, ගැටලු සංවාදශීලිව මැදිහත් වීම් තුලින් විසදාගැනීමට සහාය වීම.

7. ජාතික, ප්‍රාදේශීය ආංශික හා ව්‍යාපාරික මට්ටමේ උපදේශනයකට හා කතිකාවකට අදාළ යාන්ත්‍රණයක් සැකසීම හා හදුන්වා දීම, එවැනි යාන්ත්‍රණයකින් කාර්යක්ෂම ලෙස පුද්ගලිකව මෙන්ම සාමුහිකව අර්ථාන්විත කතිකාවක් හා ගැටලු විසදීමේ හැකියාව තහවුරු කිරීම.

8. ආර්ථිකයේ අසංවිදිත අංශ වෙත එළඹී ඒවා සංවර්ධනය කොට ත්‍රෛපාර්ශව සමාජ කතිකාවට ගරු කරන වගකීම් සහිත ව්‍යාපාර බවට පත්කිරීම

9. ආයෝජන වලට හිතකර පරිසරය නිෂ්පාදන හා වෘත්තීය කාර්යක්ෂමතාව, රැකියා අවස්ථා උත්පාදනයට අත්‍යවශ්‍ය බව හදුනා ගැනීම, ත්‍රෛපාර්ශවීය ආයතන මගින් ඉහත අරමුනු සදහා දායකත්වය සපයා ගැනීම

10. සේව්‍ය හා සේවක සංවිධාන අතර තොරතුරු හුවමාරුව සදහා ස්ථිර ක්‍රියාකාරකම් සංවිධාන කිරීම, එහිදී ජාතික වැදගතකමින් යුත් කරුනු සාකච්ඡාවට ලක්කළ හැකිවේ. එමෙන්ම ජාතික හා සමාජ ආර්ථික සංවර්ධන කරුණු පිලිබදව අදාළ පාර්ශවයන්ට අර්ථාන්විත කතිකාවකට සහභාගී විය හැකිවේ

11. ව්‍යාපාරික මට්ටමින් ද්විපාර්ශවීය යාන්ත්‍රණයක් ඇතිකිරීමට දිරිදීම, එවැනි පාර්ශවයන්ට ක්‍රියාශීලී හා අර්ථාන්විත සහභාගීත්වයක් සදහා ඉඩහසර ඇතිකිරීමට සහාය වීම

## රජයේ ප්‍රමුඛ කාර්ය භාරය

**1.** සමාජ කතිකාව සඳහා සුදුසු පූර්ව කොන්දේසි සහතික කිරීම.

**අ.** ජාත්‍යන්තර කම්කරු සංවිධාන ප්‍රකාශනයේ මූලික ප්‍රතිපත්ති හා අයිතීන්ට ගරු කරමින් ජාතික මට්ටමින් සියලු නීති ජාත්‍යන්තර නීති වලට අනුකූලව ක්‍රියාත්මක කිරීම හා එම නීති සමුදායන් කාර්යක්ෂමව හා වේගවත්ව ක්‍රියාවට නැංවීම.

**ආ.** ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ හා ජගත් කම්කරු ප්‍රඥප්තියේ වගන්ති ප්‍රකාර සියලු පුරවැසියන්ගේ අයිතිවාසිකම් සුරැකීම, මිත්‍රත්වයේ නිදහස අදහස් ප්‍රකාශ කිරීමේ නිදහස හා නීත්‍යානුකූලව රැකියාව වෘත්තිය වෙළදාම හෝ ව්‍යාපාරක වශයෙන් වෙනසක් නොසලකා ඕනෑම සේවාවක නිරත වීමේ නිදහස තහවුරු කළ යුතුය.

**ඇ.** කාර්මික සබඳතා උදෙසා හිතකර පරිසරයක් ඇතිකිරීම, සේව්‍ය හා සේවක ආයතන වල කාර්යභාරය මෙන්ම සාමූහික කේවල් කිරීමේ අයිතියට ගරුකිරීම.

**2.** පහත අරමුනු ඔස්සේ ද්විපාර්ශවියතාව හා ත්‍රෛපාර්ශවිකතා සහයෝගීතාව වැඩිදියුනු කිරීම.

**අ.** ජාතික ප්‍රාදේශිය හා ආංශික මට්ටමින් අර්ථාන්විත ලෙස පැහැදිලි ක්‍රමවේදයක් යටතේ සේව්‍ය හා සේවක සබඳතා නැංවීම.

**ආ.** සේව්‍ය සේවක හා ඔවුන්ගේ ආයතන වලට ජාතික සංවර්ධනය හා සැලසුම්කරණය පිළිබඳ හඬක් ලබාදීම.

**ඇ.** අදාළ පාර්ශවයන්ගේ හඬට කන්දෙමින් හා අයිතීන්ට ගරුකරමින් අපක්ෂපාතීව ගැටුම් නිරාකරණය.

**ඈ.** සේවා තත්වයන් නැංවීම හා සේවා ස්ථානයේ ආරක්ෂාව හා සෞඛ්‍යය තහවුරු කිරීම.

**ඉ.** සමාජ ආරක්ෂාව නැංවීම.

**ඊ.** පුහුනුව හා අධ්‍යාපනය.

**උ.** ජාත්‍යන්තර කම්කරු සංවිධානයේ මූලික ප්‍රතිපත්ති හා සේවා ස්ථානයේ අයිතීන්ට පූර්ණ ලෙස අනුකූල වෙමින් නීති පද්ධති උසස් කිරීම.

**ඌ.** නීති හා රෙගුලාසි කාර්යක්ෂම ලෙස ක්‍රියාත්මක කිරීම, අන්තර් ජාතික ප්‍රමිතීන්ට අනුව වෙනස් වන සේවා හා සමාජ අවශ්‍යතා වලට ගැලපෙන පරිදි නීති රෙගුලාසී වෙනස් කිරීම, වලංගු කරන ලද ජාත්‍යන්තර කම්කරු සංවිධානයේ නීති හා රෙගුලාසි බලාත්මක වන පරිදි නීති හඳුන්වා දීම හෝ නවීකරණය.

**එ.** ශ්‍රී ලංකාවේ කර්මාන්ත හා සේවා වල තරගකාරීත්වය හා ඵලදායිතාව නැංවීම.

**ඒ.** සේව්‍ය හා සේවක පාර්ශවයන්ගේ ක්‍රියාකාරකම් හැකියාව වැඩිදියුනු කිරීම.

**ඔ.** සේව්‍ය හා සේවක ආයතන වල ගැටලු විසඳීමේදී ඒවාට බලපාන වෙනත් ඕනෑම කරුණක්.

**3.** සාමූහික ගිවිසුම් ක්‍රියාත්මක කිරීම තහවුරු කිරීම, රෛනතික බේරුම්කරණය හා අදාළ බේරුම්කරණ නිලධාරීන් අපක්ෂපාතීව හා උසස් මට්මින් එම සේවා ලබා දීම සඳහා පුහුණු කිරීම හා දිරිමත් කිරීම.

**4.** ගැටුම් නිරාකරණය හා අවසන් එකගතාවන්ට එළඹීමට සේව්‍ය හා සේවක ආයතන දිරිමත් කෙරෙන පිරිදි දුක්ගැනිවිලි හා ආරවුල් විසදීමේ ක්‍රමවේදයක් සැකසීම.

**5.** සෞඛ්‍යය සම්පන්න හා අර්ථාන්විත කතිකාවක නිරත වීම සඳහා සේවක හා සේව්‍ය ආයතන වලට සුදුසු පහුණුවක් හා අධ්‍යාපනයක් ලබා දිම, උපදේශණ හා කතිකාවන්ට සහභාගී වීම හා නිසි සාමූහික කේවල්කරණයක් සඳහා තොරතුරු සේවා සහතික කිරීම.

**6.** 144 සම්මුතිය හා සෙසු වලංගුකරන ලද ප්‍රමිතීන් පූර්ණ ලෙස ක්‍රියාත්මක කිරීම, ඒවා පිළිබද කාර්යක්ෂම භාවය තක්සේරු කිරීමට සේවක හා සේව්‍ය සංවිධාන සහභාගී කරවා ගැනීම.

## ත්‍රෛපාර්ශවීය වගකීම හා එම ආයතන වල පොදු කාර්ය භාරය

රජයේ නායකත්වය යටතේ විශේෂයෙන් අදාළ පාර්ශව ජාතික උපදේශණ වේදිකාවක් ඇති කරගැනීමට එකග වී ඇත. එහිදී පවතින යාන්ත්‍රණ හා නව යාන්ත්‍රණ ඇති කරගනු ලැබේ. පහත අරමුණු එහිදී ඉටුකරගැනීමට අපේක්ෂිතයි.

i. වෙනස් ලෙස නොසැළකීම හා සැමට සම අවස්ථා.

ii. ජාතික ඒකාබද්ධතාව හා සමාජ ප්‍රග්ධනය ඇති කිරීම.

iii. ජාතික සැලසුම් හා සංවර්ධන ක්‍රියාදාමයේදී සේව්‍ය හා සේවක සංවිධාන සහභාගීත්වය.

iv. ආචාර ධර්ම ඉහළ නැංවීම හා ගුණාත්මක හා ප්‍රතිලාභ සහිත රැකියා උත්පාදනය.

v. ඵලදායිතාව හා ලැබීම් බෙදා හදා ගැනීම.

vi. මානව හිමිකම් හා වටිනාකම් සුරැකීමේ ප්‍රතිලාභ පිලිබදව දැනුවත් කිරීම.

vii. ගැටුම් නිරාකරණ විකල්ප ක්‍රියාමාර්ග භාවිතය විශේෂයෙන් මැදිහත්වීම් හා කතිකා කන්ඩායම්.

viii. ජාතික හා අන්තර්ජාතික ප්‍රමිතීන් යෙදවීම.

ix. සංක්‍රමණ සේවකයින් පිලිබද ගැටලු.

x. සේව්‍ය හා සේවක සංවිධාන වල ශක්‍යතා ගොඩනැංවීම.

xi. ජාතික මට්ටමේ අර්ථාන්විත කාර්යභාරයක් ඉටු කිරීමට හෝ කතිකාවේ වටිනාකම් ව්‍යාපාරික මට්ටමින් ප්‍රචලිත කිරීම හෝ කාර්යශූරත්වයක් ඇතිකිරීම සදහා පර්යේෂණ අධ්‍යාපනය හා නිපුණතා පහුණුව ලබා දීම.

මෙම වැඩ සැලැස්ම සදහා කැපවී සිටින පාර්ශව ඒ වෙනුවෙන් 2009 අප්‍රේල් මස කොළඹදී අත්වැල් බැදගනු ඇත.

# சமூக கலந்துரையாடலுக்காக தேசிய கட்டமைப்பு



சர்வதேச தொழிள் தாபனத்தின் (ILO) அடிப்படை உடன்படிக்கைகளை அங்கீகரித்து, அதன் மூலாதாரக் கோட்பாடுகளுக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாட்டு சாசனத்திற்கும் மதிப்பளிக்கும் இலங்கை, சர்வதேச தொழிள் தாபனத்தின் பொறுப்பு வாய்ந்த அங்கத்தவர் என்ற வகையில், நல்லாட்சி, ஜனநாயகம், சமூக நீதி என்பவற்றை அடைவதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ள ஒரு நாடாக விளங்குகின்றது.

பல நூற்றாண்டுகளாகப் பேணப்படும் சமூக ஒப்புரவு என்ற பாரம்பரிய மரபுரிமையைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதில் அது ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் தனது அரசியல் யாப்பின் மூலமும் வேறு சட்டவாக்கங்கள் மூலமும் அடிப்படை சிவில் சுதந்திரங்கள் மற்றும் பாரபட்சமின்மை தொடர்பான உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது.

நாட்டின் அபிவிருத்தியானது தொழிற்றுறை அமைதி, தேசிய வினைத்திறன் என்பவற்றிலேயே தங்கியுள்ளது என்றும் சமூகப் .பங்காளிகளுக்கு இடையிலான சிறந்த புரிந்துணர்வு, சுய கட்டுப்பாடு என்பவற்றின் மூலமே பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தை எய்த முடியும் என்றும் இலங்கை அரசாங்கம் கருதுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூகப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்கு சமூக உரையாடலும் முத்தரப்புச் செயற்பாடுமே இன்றியமையாத ஜனநாயக வழி என்றும் இதன் மூலமே ஒவ்வொரு தரப்பின் தேவைகளையும் பிரச்சினைகளையும் நன்கு புரிந்துகொண்டு பொதுவான இணக்கத்திற்கு வர முடியும் என்றும் முத்தரப்புப் பங்காளிகள் ஏற்றுக்கொள்கின்றனர்.

உலகமயமாக்கலின் விளைவாக தொழில் உலகில் எதிர்நோக்கப்படும் எண்ணற்ற சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் என்பனவும் சமூக அங்கத்தவர்களினால் தேசிய, பிரதேச, தொழிற்றுறை மற்றும் நிறுவன மட்டங்களில் பொருத்தமான தீர்வுகள் காணப்படுவதன் முக்கியத்துவமும் கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இனங்காணப்பட்ட முன்னுரிமை விடயங்களை அமுல்செய்வதற்கு அவசியமான செயற்றிட்டங்களை உருவாக்குவதில் முத்தரப்பு அமைப்பின் பங்காளிகள் ஆற்ற வேண்டிய முக்கியமான பணிகளை 2008 – 2012 காலப்பகுதிக்கென வகுக்கப்பட்ட **கௌரவமான தொழிலுக்குரிய நாட்டு நிகழ்ச்சித்திட்டம்** எடுத்துக் கூறுகின்றது. இந்த முன்னுரிமை விடயங்கள் பின்வருமாறு:

- பொருளாதார ரீதியில் பின்தங்கிய மற்றும் நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்ளில் கூடுதலான மற்றும் சிறந்த தொழில்களுக்கான வாய்ப்புக்களை அதிகரித்தல்.
- தொழில் நிர்வாகம் மேம்படுத்தப்படுவதுடன், சமத்துவமான தொழில் நடைமுறைகளை ஊக்குவித்தல்.
- தொழிற் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் தொழிற் போட்டி தொடர்பான முன்முயற்சிகளில் முத்தரப்பு ஒத்துழைப்பை முன்னேற்றுதல்

இவற்றுடன் தொடர்புடைய வேறு சில விடயங்களும் இத் திட்டத்தில் இனங்காட்டப்பட்டுள்ளன. முறைசாராப் பொருளாதாரம், ஆண்-பெண் சமத்துவம், ILO நியமங்களின் ஊக்குவிப்பும் அங்கீகாரமும், HIV/AIDS தொடர்பான நடைமுறைக் கோவையை ஏற்றுக்கொள்ளுதல் என்பனவே அவையாகும்.

ஆகவே, கௌரவமான தொழிலுக்குரிய நாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்குக் உந்துசக்தி அளிக்கவும் அதன் இலக்குகளை அடைவதில் கூடுதல் கவனம் செலுத்தவும் இடமளிக்கும் வகையில் முத்தரப்புப் பங்காளிகளுக்கு இடையே சமூக உரையாடலுக்கான ஒரு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென முத்தரப்பினரும் முடிவுசெய்துள்ளனர். இதற்கமைய, பின்வரும் விடயங்கள் குறித்து இவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்:

இலங்கையை வினைத்திறன் மிக்க நாடாக மாற்றவும் நிறுவனங்களை செயற்றிறன் மிக்கவையாக மாற்றவும் தொழிலாளர்கள் சிறந்த தரமான வாழ்க்கையை அனுபவிப்பதற்கு இடமளிக்கவும் கௌரவமான தொழிலின் உருவாக்கம் மற்றும் பாதுகாப்பை அதிகரிப்பதற்கும் அத்தியாவசியமான பின்வரும் பொறுப்புக்களுக்கு தொழில்தருநர்களும் தொழிலாளர்களும் அவர்களின் அமைப்புக்களும் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்:

1. தொழில் சார்ந்த சட்டங்கள் கடைப்பிடிக்கப்பட்டுப் பிரயோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதுடன் சமூக நீதி, சமத்தும் என்பவற்றைப் பெறும் வழிமுறையாக ஒன்றுகூடிச் செயற்படும் சுதந்திரம் மற்றும் கூட்டாகப் பேரம் பேசும் உரிமை என்பவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

2. சர்வதேச நியமங்களுக்கு அமைவான தொழில்சார் சட்டங்களின் மீளாய்வுக்கு உதவுவதோடு, அச் சட்டங்கள் அனுசரிக்கப்படுவதைக் கண்காணிப்பதற்குத் தொடர்ச்சியான பேச்சுக்களில் ஈடுபட வேண்டும்.

3. தொழிற்சங்க கட்டளைச் சட்டம், தொழிற்றுறைப் பிணக்குகள் அதிகாரச்சட்டம் என்பவற்றிற்கு அமைவாக, தொழில்தருநர்களும் தொழிலாளர்களும் தமது கூட்டு நடவடிக்கைகளை எவ்வித இடைஞ்சலும் தலையீடும் இல்லாமல் மேற்கொள்வதற்குக் கொண்டுள்ள உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

4. எந்தவொரு தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் அமைப்பிற்கு எதிராகவோ அல்லது அவற்றின் அங்கத்தவர்களுக்கு எதிராகவோ எவ்விதமான பாரபட்சமும் காட்டுவதைத் தவிர்ப்பதுடன், அவர்கள் சுதந்திரமாகவும் தேசிய சட்டத்தினால் விதிக்கப்பட்ட தடைகளைத் தவிர வேறேதும் தடைகள் இல்லாமலும் ஒன்றுகூடித் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் கொண்டுள்ள உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

5. பிணக்கு மற்றும் குறை நிவர்த்திக்காக செயற்றிறன் வாய்ந்த நடுநிலையான நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதோடு, தொழில் தொடர்புடைய பிரச்சினைகள் சமாதானமாகவும் தொழிற்றுறை உறவுகளில் சிறந்த நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்ற நற்பெயர் நாட்டிற்குக் கிடைக்கும் விதத்திலும் தீர்த்து வைக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

6. சமூகத்திற்கு இழப்பையும் சேதத்தையும், பாதிக்கப்படுபவர்களுக்கு இழப்பை அல்லது கஷ்டத்தையும் ஏற்படுத்தக்கூடிய அநீதியான நடைமுறைகளைத் தவிர்ப்பதுடன், பேச்சுவார்த்தை மூலம், அல்லது பொருத்தமானவிடத்து, சமரச முயற்சி மூலம், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

7. தேசிய, பிரதேச, தொழிற்றுறை மற்றும் நிறுவன மட்டங்களில் ஆலோசனைகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கான அமைப்பு முறையொன்றை ஆதரித்து, வடிவமைத்து அறிமுகப்படுத்த வேண்டும். இந்த அமைப்பு முறையானது செயற்றிறன் வாய்ந்ததாக இருப்பதுடன் பயனுள்ள பேச்சுவார்த்தைகளுக்கும் பிரச்சினைத் தீர்வுக்கும் உதவியாக தனியாகவும் கூட்டாகவும் ஆய்வுகளில் ஈடுபடுவது உறுதிசெய்யப்பட வேண்டும்.

8. முத்தரப்புச் செயற்பாட்டிற்கும் சமூக கலந்துரையாடலுக்கும் மதிப்பளிக்கின்ற பொறுப்பு வாய்ந்த தொழிற்றுறையை உருவாக்குவதற்கு இடமளிக்கும் வகையில், பொருளாதார அமைப்பின் ஒழுங்குமுறை சாராத துறைகள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும்.

9. தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு முதலீடுகளுக்கும் செயற்றிறன் வாய்ந்த உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் சாதகமான சூழ்நிலை அத்தியாவசியமானது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நோக்கத்திற்காக, முத்தரப்பு அமைப்பின் அங்கத்தவர்கள் வழங்கக்கூடிய ஆக்கபூர்வமான பங்களிப்பை இனங்காணுவதில் ஈடுபட வேண்டும்.

10. தேசிய முக்கியத்துவமான விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு இடமளிக்கும் வகையில் தொழில்தருநர்களுக்கும் தொழிலாளர் அமைப்புக்களுக்கும் இடையே கிரமமான தகவல் பரிவர்த்தனைகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதன் மூலம், முத்தரப்பினரும் தேசிய அபிவிருத்தி மற்றும் சமூக-பொருளாதார அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் ஆக்கபூர்வமாகப் பங்குகொள்ள முடியும்.

11. தொழில் நிறுவன மட்டத்தில் இருதரப்பு அமைப்பு முறைகள் உருவாக்கப்படுவதை ஊக்குவிப்பதோடு, இத்தகைய அமைப்புக்களில் தீவிரமானதும் ஆக்கபூர்வமானதுமான பங்குபற்றுதலை ஊக்குவிப்பதற்கு அவசியமான ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கு உதவ வேண்டும்.

## அரசாங்கத்தின் தலைமைப் பணி

**1.** சமூக கலந்துரையாடலுக்கு அவசியமான முன்நிபந்தனைகள் நிலவுவதை உறுதிசெய்ய வேண்டும். இந்த முன்நிபந்தனைகளுள் பின்வருவனவும் அடங்கும்:

**a.** ILO பிரகடனத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, தொழில் சார்ந்த அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் உரிமைகளுக்கும் மதிப்பு அளிப்பதோடு, சகல தேசிய சட்டங்களும் அங்கீகரிக்கப்பட்ட ILO உடன்படிக்கைகளுக்கு அமைவானவையாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், சட்டம் மற்றும் நடைமுறைகள் விரைவாகவும் தீர்க்கமாகவும் அமுல்செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**b.** .சகல பிரஜைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகள், விசேடமாக கூட்டுச்சேரும் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஏதேனுமொரு சட்டபூர்வமான தொழிலில், நிபுணத்துவ தொழிலில், வர்த்தகத்தில், வியாபாரத்தில் அல்லது இலங்கை ஜனநாயக சோ'லிசக் குடியரசின் அரசியல் யாப்பு மற்றும் ILO உடன்படிக்கைகளுக்கு அமைவான தொழில் முயற்சியொன்றில் ஈடுபடுவதற்குக் கொண்டுள்ள சுதந்திரம் என்பவற்றைச் சரியான முறையில் அமுல்செய்ய வேண்டும்.

**c.** சுமுகமான தொழிற்றுறை உறவுகள், தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் அமைப்புக்களின் பணிகளுக்கு மதிப்பும் அங்கீகாரமும் அளிக்கப்படுதல், கூட்டாகப் பேரம் பேசுதல் என்பற்றிற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

**2.** இருதரப்பு மற்றும் முத்தரப்பு முறைமைகளை ஊக்குவித்து மேம்படுத்த வேண்டும். குறிப்பாக, இத்தகைய முறைமைகள் இல்லாத துறைகளில் இது செய்யப்பட வேண்டும். இதன் நோக்கங்கள் பின்வருமாறு:

**a.** தேசிய, பிரதேச, தொழிற்றுறை மட்டங்களில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் தெளிவான உபாயத்தைக் கடைப்பிடிப்பதற்காக தொழில்தருநர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான உறவுகளை முன்னேற்றுதல்.

**b.** தேசிய அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சார்ந்த விடயங்களில் தொழில்தருநர், தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் அமைப்புக்களின் குரலுக்கு உரிய இடம் அளித்தல்.

**c.** தரப்புக்களுக்கு இடையிலான பிணக்குகளை பக்கச்சார்பின்றியும் விரைவாகவும் நீதியான விசாரணைக்கு அவர்கள் கொண்டுள்ள உரிமையை அங்கீகரிக்கும் விதத்திலும் தீர்த்து வைத்தல்.

**d.** தொழில் செய்யும் இடங்களில் நிலைமைகளை முன்னேற்றுதல் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு உடல்நலம் என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல்.

**e.** சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

**f.** பயிற்சியும் கல்வியும்.

**g.** தொழில் சார்ந்த ILO அடிப்படைக் கோட்பாடுகளும் உரிமைகளும் பூரணமாக அனுசரிக்கப்படுவதற்கு சட்ட ரீதியான கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துதல்.

**h.** சட்டங்களும் பிரமாணங்களும் தீர்க்கமாக அமுல்செய்யப்படுவதை உறுதிப்படுத்துதல், சர்வதேச நியமங்களுக்கும் மாறிவரும் தொழில் மற்றும் சமூகத் தேவைகளுக்கும் ஏற்ப சட்டங்களையும் பிரமாணங்களையும் மீளாய்வு செய்தல், அங்கீகரிக்கப்பட்ட ILO உடன்படிக்கைளுக்கு செயல்வலு அளிப்பதற்காக சட்டங்களையும் பிரமாணங்களையும் புதிதாகக் கொண்டுவருதல் அல்லது அவற்றில் மாற்றங்களைச் செய்தல்.

**i.** இலங்கையின் தொழிற்றுறையிலும் சேவைகளிலும் வினைத்திறன், போட்டித்திறன் என்பவற்றை மேம்படுத்துதல்.

**j.** தொழில்தருநர் மற்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் தமது நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ள அவர்களின் ஆற்றல் வளத்தைக் கட்டியெழுப்புதல்.

**k.** தொழிலுடன் நேரடித் தொடர்புடைய வேறேதும் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதும் அப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் அமைப்புக்களை ஈடுபடுத்துவதும்.

**3.** கூட்டு ஒப்பந்தங்கள், சட்டத் தீர்வுகள், இழப்பீடுகள், கட்டளைகள் என்பவற்றின் முறையான அமுலாக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும். சேவைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் அச் சேவைகளைப் பக்கச்சார்பின்றி மிகச் சிறந்த முறையில் வழங்குவதை உறுதிப்படுத்துவதோடு, அதற்காக அவர்களுக்கு ஊக்கமும் முறையான பயிற்சியும் அளிக்க வேண்டும்.

4. பிணக்கு மற்றும் குறைதீர்ப்பு ஏற்பாடுகளை வகுக்க வேண்டும். தொழில்தருநர் அமைப்புக்களும் தொழிலாளர் அமைப்புக்களும் இவற்றைச் சிறந்த நடைமுறையாகப் பயன்படுத்த முடியும். பிணக்குகள் ஏற்படும்போது, சம்பந்தப்பட்ட தரப்பினரே அவற்றிற்கு நியாயமான, நிலையான முறையில் தீர்வு காண்பதை ஊக்குவிக்க வேண்டும்.

5. தொழிலாளர் அமைப்புக்களும் தொழில்தருநர் அமைப்புக்களும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கு உதவியாக அவற்றின் பிரதிநிதிகளுக்குப் பொருத்தமான பயிற்சியும் கல்வியும் வழங்க வேண்டும். கூட்டாகப் பேரம்பேசுதல், கலந்துரையாடல் மற்றும் ஆலோசனைக் கூட்டங்களில் பங்குபற்றுதல் என்பவற்றை சரியான முறையில் மேற்கொள்வதற்கு உதவியாக தகவல் சேவைகள் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

6. சர்வதேச தொழில் தாபனத்தின் 144ஆவது உடன்படிக்கையையும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நியமங்களையும் பூரணமாக அமுல்செய்ய வேண்டும். அவற்றின் அமுலாக்கத்தினால் கிடைக்கும் பயனை மதிப்பீடு செய்வதில் தொழிலாளர் மற்றும் தொழில்தருநர் அமைப்புக்களை ஈடுபடுத்த வேண்டும்.

## முத்தரப்புக் கடப்பாடும் முத்தரப்பு அங்கத்தவர்களின் பொதுவான பணிகளும்

அரசாங்கம் வழங்கும் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய ஆலோசனை செயலரங்கம் ஒன்றை ஏற்படுத்த முத்தரப்பினரும் விசேடமாக உடன்பட்டுள்ளனர். இச் செயலரங்கமானது தற்போதுள்ள செயல்முறைகள் மற்றும் தேவைப்படும் புதிய செயல்முறைகளுடன் இணைந்து பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டுள்ளன:

i. பாரபட்சமின்மையும் சகலருக்கும் சமவாய்ப்பும்.

ii. தேசிய மீளிணைப்பும் சமூக மூலதனத்தைக் கட்டியெழுப்புதலும்.

iii. தேசிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி முன்முயற்சிகளில் தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் அமைப்புக்கள் பங்கேற்றல்.

iv. நெறிமுறையான முதலீடுகளை ஊக்குவித்தலும் பயனுள்ள மற்றும் தரமான தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதலும்.

v. வினைத்திறன் மற்றும் ஆதாயத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்.

vi. முழுச் சமுதாயத்தினதும் நன்மைக்காக பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் மனித உரிமைகளுக்கும் விழுமியங்களுக்கும் முக்கிய இடமளிப்பததன் பயன்பாடு குறித்துக் கூடுதலான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

vii. பிணக்குகளுக்குத் தீர்வுகாண்பதற்கான மாற்று வழிகளை (ADR), குறிப்பாக சமரசத் தலையீடு, பேச்சுவார்த்தைக் குழுக்கள் மூலம் தீர்வுகாணும் முறையை, பயன்படுத்துதல்.

viii. தேசிய மற்றும் சர்வதேச நியமங்களின் முறையான அமுலாக்கம்.

ix. வெளிநாடுகளில் தொழில்செய்வோர் தொடர்பான பிரச்சினைகள்.

x. தொழில்தருநர் மற்றும் தொழிலாளர் அமைப்புக்களின் ஆற்றல் வளங்களைக் கட்டியெழுப்புதல்.

xi. தேசிய மட்டத்தில் ஆக்கபூர்வமான பணிகளை ஆற்றுவதற்கு அல்லது தொழில் நிறுவன மட்டத்தில் கலந்துரையாடல்களின் முக்கியத்துவம் பற்றிய செய்தியைப் பரப்புவதற்கு அவசியமான திறமைகளை விருத்திசெய்யும் பொருட்டு ஆராய்ச்சி, கல்வியூட்டல் மற்றும் பயிற்சி.

மேற்குறிப்பிட்ட கட்டமைப்பிற்கு பங்களிப்புச் செய்த தரப்பினர் தமது அர்ப்பணிப்பினை உறுதிப்படுத்தும் முகமாக, 2009ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இருபத்து நான்காம் திகதி கொழும்பில் வைத்து இந்த ஆவணத்தில் கையொப்பம் இட்டுள்ளனர்.

